<u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 16.11.2018 (வெள்ளி கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 15.11.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் –1**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை கீழ்க்காணும் தினசரி நாளிதழ் மற்றும் தொழில் மலரில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தமிழ் சுடர் தினசரி நாளிதழ் | 9000 |
| 2 | வணக்கம் இந்தியா | 7750 |
| 3 | தினத் தந்தி (தொழில் மலர்) | 13453 |
| 4 | தினகரன் (தொழில் மலர்) | 23100 |
| 5 | தினமலர் (தொழில் வர்த்தக மலர்) | 25725 |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 248**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–2**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2017–2018–ன் (MCC) கீழ் மினி ஆட்டோ வாகனங்கள்–4 வாங்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4235/2018/பி3 நாள்.07.02.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மின்னனு ஒப்பந்தப்புள்ளி (E-Tender) அறிவிப்பினை 28.04.2018 தேதிய மக்கள் குரல் தினசரி நாளிதழில் வெளியீடு செய்தமைக்காக, அந்நிறுவனத்தின் மூலம் வரப்பெற்ற ரூ.16581/– பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 249**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4491/2015/பி3 நாள்.24.08.2018–ல் நகராட்சி பகுதிகளில் அனைத்து வார்டுகளிலும் உயர்தரமான குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, அதற்கான அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக அக்கார்டு விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 05.10.2018–ம் நாளில் தமிழ் மற்றம் ஆங்கிலம் நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.71820/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை அக்கார்டு விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 250**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை–2016–ன்படி (SWM User Charge) திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் விடுபட்ட கட்டண பட்டியலை மக்கள் குரல் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு, ஏற்கனவே மன்ற தீர்மான எண்.107 நாள்.15.06.2018–ல் அனுமதி பெற்றதை முன்னிட்டு நாளிதழ் விளம்பரம் பட்டியல் தொகை ரூ.16,581/–ஐ மேற்படி மக்கள் குரல் நாளிதழுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 251**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை கீழ்க்காணும் தினசரி நாளிதழில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனம் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினவேல் | 6300 |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.356/2018/இ1)**

**தீர்மான எண். 252**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சின்னக்குளம் பகுதியில் நுண் உரக்கூடம் இரண்டு பணிக்கு கிராவல் நிரப்புதல், கூடுதல் காலம்கள் அமைத்தல் மற்றும் ஆர்.சி.சி மேற்தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள தொகை ரூ.9.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.230 நாள்.16.10.2018–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 17.10.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்டரக்சன்ஸ் | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.பி.வீராச்சாமி | 3.00% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு சபரி கன்ஸ்டரக்சன்ஸ் நிறுவனம் 0.05% மதிப்பீட்டு விலையில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சபரி கன்ஸ்டரக்சன்ஸ், நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 253**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –7**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட கீக்காணும் பூங்காக்களில் ஏற்கனவே ஆர்.சி.சி கம்பம் ஊன்றி முற்கம்பி வேலி அமைக்கப்பட்டு பாதுகாப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 15.10.2018–ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் முற்கம்பி பாதுகாப்பு வேலி அமைத்த இடங்களில் பசுமை உரக்குடில் (Garden Micro compost centre) அமைத்திட அறிவுரை வழங்கப்பட்டது. விபரம் பின்வருமாறு,

| வ. எண் | பூங்கா அமைவிடம் | வ. எண் | பூங்கா அமைவிடம் |
|---|---|---|---|
| 1 | கைராசி நகர்–1<br>(நகராட்சி அலுவலர்கள் குடியிருப்பு) | 6 | கைராசி நகர் –2 |
| 2 | அங்கு நகர் –1 | 7 | குறிஞ்சி நகர் |
| 3 | அங்கு நகர் –2 | 8 | கஸ்தூரி நகர் |
| 4 | தாராபுரம் சாலை மேற்கு | 9 | சொசைட்டி காலனி |
| 5 | தென்றல் நகர் | | |

மேற்காணும் பூங்காக்களில் GMCC அமைத்திட ரூ.9.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்காணும் நிதியினை வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
2. அவசர அவசியம் கருதியும், GMCC பணியினை குறித்த காலத்தில் முடித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் ஏற்கலாம்.

**தீர்மான எண். 254**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –8</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரைக் கடிதம் ந.க.எண்.83/செ.ம.தொ/2018 நாள்.07.08.2018–ன்படி ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை கீழ்க்காணும் தினசரி நாளிதலான மாலை மலர் (தீபாவளி மலர்) வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனம் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மாலை மலர் (தீபாவளி மலர்) | **9660** |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.356/2018/இ1)

**தீர்மான எண். 255**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ரூ.91.11 இலட்சம் மதிப்பீட்டில் TUFIDCO நிறுவனத்தின் வட்டியில்லா கடன் ரூ.91.11 இலட்சம் மூலம் 3000 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்கிட தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை TUFIDCO நிறுவனத்தின் 15.10.2018 தேதிய கடன் அனுமதி கடிதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 3000 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 3000 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை | 91.11 |
| 2 | சரக்கு மற்றும் சேவை வரி கட்டணம் (GST) | 10.93 |
| 3 | தொழிலாளர் நல நிதி (Labour Welfare Fund) | 1.05 |
| 4 | இதர செலவினம் (Lumpsum provision) | 2.14 |
| | மொத்தம் | 105.23 |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. 3000 குடிநீர் வீட்டிணைப்பு வழங்கும் பணிக்கு ரூ.91.11 இலட்சம் வட்டியில்லா கடன் தொகையினை பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான சரக்கு மற்றும் சேவை வரி கட்டணம், தொழிலாளர் நல நிதி மற்றும் இதர செலவினங்களுக்கான தொகை ரூ.14.12 இலட்சத்தினை டூஃபிட்கோ நிறுவனம் அறிவுறுத்தியுள்ளவாறு நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும், மேற்படி திட்டப்பணிக்கு தனியாக ஒரு வங்கி கணக்கு துவங்கி பராமரிக்கவும், வட்டியில்லா கடனை டூஃபிட்கோ நிறுவனத்திற்கு திருப்பி செலுத்தும் வரை (Escrow) எஸ்க்ரோ வங்கி கணக்கு ஒன்றினை தனியாக துவங்கி, மேற்படி கணக்கு வழியாக அனைத்து வருவாய்களையும் பராமரிக்கவும், மும்முனை ஒப்பந்தம் ஒன்று தயார் செய்து (எஸ்க்ரோ கணக்கு துவக்கப்படும் வங்கி, டூஃபிட்கோ நிறுவனம் மற்றும் நகராட்சி) சமர்ப்பிக்கவும், மேற்படி வட்டியில்லா கடன் பெறுவதற்கு டூஃபிட்கோ நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு நகராட்சி சார்பாக ஆணையர் ஒப்புதல் வழங்கி அனுமதிக்கலாம் (ந.க.எண்.334/2018/இ1)

**தீர்மான எண். 256**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா இயக்கம் தனிநபர் கழிப்பிடம் கட்டுதல் திட்டத்தின் கீழ் 5 பரப்புரையாளர்கள் 1 மேற்பார்வையாளர் கொண்டு 18 வார்டுகளிலும் வீடு வீடாக சென்று கழிப்பிடமில்லா வீடுகள் கண்டறிந்து, கழிப்பிடம் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டதன்படி, கூடுதல் இலக்காக 1115 எண்ணம் கட்டி முடிக்க மத்திய, மாநில அரசுகளின் மானிய பங்குத் தொகை வரப்பெற்றுள்ள நிலையில் இலக்கு எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், இலக்கினை விரைவாக எட்ட ஏதுவாக ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. 1 தனி நபர் கழிப்பிடம் கட்ட குறைந்தபட்ச ரூ. 12,000/– என்ற நிலையில் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மானிய தொகை ரூ.8,000/– வழங்கப்படுவதால், ஏற்படும் இழப்புகளுக்கு பொதுமக்கள் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளில் இருந்து பெறப்படும் CSR தொகை ICICI வங்கி தொகை ரூ.30,000/– மற்றும் கனரா வங்கி ரூ.1,50,000/– மொத்தம் ரூ. 1,80,000/– வரப்பெற்றதை, தனி நபர் கழிப்பிடம் கட்டி முடித்து முறையாக தணிக்கை செய்யப்பட்டு மானியத் தொகை வழங்கும் போது CSR பங்கு தொகை வைப்பிருப்பின் தலா 1 கழிப்பிடத்திற்கு ரூ.1,500/– கூடுதலாக வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. CSR பங்கு தொகை எள்பது பொதுமக்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிலிருந்து பெறப்படும் உதவித் தொகையாகும். இதை தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ஊக்க தொகையாக ரூ.1,500/– வழங்கலாம்.

**தீர்மான எண். 257**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2018–19–ம் ஆண்டு வரை மொத்தம் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் 5345 பயன்பாட்டில் உள்ளது. 2017–18–ம் ஆண்டு குடிநீர் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டதில் 100% வசூல் முடிக்கப்பட்டது.

எனவே இனி வரும் காலங்களில் இதே போல் 100% வசூல் செய்யும் நோக்கில் குடிநீர் கட்டணம் 3 மாதங்களுக்கு ஒரு முறை இணைப்புதாரர்கள் குடிநீா கட்டணம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இங்ஙனம் குடிநீர் கட்டணம் செலுத்தப்படுவது இல்லை. இதனை சரி செய்யும் நோக்கில் இனி வரும் காலங்களில் குடிநீர் கட்டணம் நிலுவையின்றி வசூல் செய்யும் நோக்கில் முறையாக (3 மாதங்களுக்கு ஒரு முறை) செலுத்தாத குடிநீர் இணைப்புதாரர்களுக்கு தாமத கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.20/– மட்டும் வசூல் செய்ய தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீருக்கென செலுத்தப்பட்டு வந்த மாதாந்திர தொகை 100000 லிட்டருக்கு ரூ.4.50/– என செலுத்தப்பட்ட தொகை தற்சமயம் ரூ.9.00 வசூல் தொகையினை செலுத்தப்பட்டு வருகின்றது. மேலும் தலைமை நீரேற்று நிலையம் மூலம் குடிநீர் Plumbing Expenses மாதம் மாதம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வரும் தொகை நிர்ணயம் கூட்டப்பட்டு அதன்படி செலுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி மேற்கண்ட காரணங்களாலும், நகராட்சி நிர்வாக நலன் மற்றும் வசூல் பணியில் நிலுவையின்றி 100% வசூல் செய்யும் நோக்கில் குடிநீர் கட்டணம் 3 மாதங்களுக்கு ஒரு முறை கட்டணம் செலுத்தாத இணைப்புதாரர்களுக்கு மாதம் ரூ.20/– மட்டும் மாதக் கட்டணம் வசூல் தொகையுடன் குடிநீர் உபவிதிகளில் மாற்றம் செய்து வசூல் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 258**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 மற்றும் 18 வது வார்டுகளில் மினிபவர் பம்ப் மூலம் விநியோகிக்கப்படும் தணிணீர் தொட்டிகள் சிதலமடைந்து கீழே விழும் அபாய நிலையில் உள்ளதை அப்புறப்படுத்தி புதியதாக அப்பகுதி மக்கள் பயன்படுத்துவதற்கேற்ப பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.70 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 259**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு குடிநீர் விநியோக பயன்பாட்டிற்காக நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி 1977–ம் ஆண்டு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது மேற்படி மேல்நிலைத் தொட்டி 41 ஆண்டுகளை கடந்துவிட்ட நிலையில், தொட்டியானது சிதலமடைந்தும், படிக்கட்டுகள் உடைந்து சேதமடைந்து வருவதையொட்டி அத்தொட்டியினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி குடிநீர் விநியோக பயன்பாட்டிற்கு மேல் நிலைத் தொட்டி ஒன்று மட்டுமே உள்ளதாலும், மேற்படி தொட்டியின் மூலம் விருப்பாட்சி குடிநீர் திட்டம் மற்றும் காவிரி குடிநீர் திட்டங்களின் மூலம் கிடைக்கப்பெறும் நீரினை, மேற்படி தொட்டியில் நீரேற்றபட்டு விநியோகிக்கப்படுகிறது. மேற்படி தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்ளது, அவசியமாக உள்ளதால் மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 260**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உரக்கிடங்கு இல்லாத நிலையில் இயற்கை முறையில் மக்கும் குப்பைகளை தனியாக பிரித்து Barrel Compost Method முறையில் பணி செய்ய Citizen Social Responsibility பங்களிப்பு நிதியில் (விரலி நெய், கிருஷ்ணா மேல் நிலைப் பள்ளி, திரு.பாண்டியராஜன் மற்றும் இந்தியன் வங்கி) ஆகியோர் 300லிட்டர் கொள்ளளவு கொண்ட 130 பேரல் இலவசமாக மக்கள் பணிக்காக நகராட்சிக்கு வழங்கியதை திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் பொருட்டு (Barrel Compost Method) துளையிட்டு மூடி திறக்கும் வகையில் பூட்டு மற்றும் வளையம் அமைத்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.50,000/–க்கு 05.07.2018–ம் தேதிய தீர்மன எண்.144–ல் தனிஅலுவலர் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி பேரல்களை பயன்படுத்தும் வகையில் செய்து கொடுக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | பெயர் மற்றும் நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகம்மது ரஸ்மி,<br>ஹச்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | ரூ. 1250/— |
| 2 | திரு.முத்துக்குமார்,<br>என்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | ரூ.1380/— |
| 3 | திரு.கே. தீரிஸ்வரன்,<br>இ.எஸ். பில்டார்ஸ், ஒட்டன்சத்திரம் | ரூ.1454/— |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் உள்ள திரு.ஹச்.முகம்மது ரஸ்மி, ஒட்டன்சத்திரம் அவர்களது விலைப்புள்ளி குறைவாக அளித்துள்ளதை தொடர்ந்து, மேலும் தலா ஒரு பேரலுக்கு ரூ.1,250/— கூடுதல் செலவினம் ஏற்படுவதால், ஏற்கனவே உத்தேசமாக செலவினத் தொகை ரூ.50,000/— மற்றும் கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.1,13,000/— மொத்தம் ரூ.1,63,000/— தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற திரு.ஹச்.முகம்மது ரஸ்மி, ஒட்டன்சத்திரம் அவர்கள் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு வேலை ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவு, அதற்கான செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 261**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 15</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுகாதாரப் பிரிவு எதிர் வரும் மழைக்காலம் மற்றும் டெங்கு காய்ச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வராமல் தடுப்பதற்கு முதிர்ந்த நிலையிலுள்ள கொசுக்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் கையினால் இயக்ககூடிய புகை தெளிக்கும் இயந்திரம் (Hand fog Mechine) பயன்பாட்டில் உள்ளது. ஆனால் சீட்டிற்கு உள்பகுதியில் அடிக்க பயன்படுத்தும் சிறிய புகை போக்கி இயந்திரம் (Mini fog Machine) பயன்படுத்த தேவையான ஒரே கல் எரிவாயு உருளைகள் தேவைப்படுகிறது. டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்களை உடனுக்குடன் கட்டுப்படுத்த ஏதுவாகவும் பொது சுகாதார அத்தியாவசிய அவசியத்தை முன்னிட்டும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் ஒரு கல் எரிவாயு உருளைகள் வாங்கிய பின்பு பட்டியல் தொகை வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/— பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.1184/2018/எச்1)

**தீர்மான எண். 262**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுகாதாப் பிரிவு எதிர்வரும் மழைக்காலத்தினை முன்னிட்டு துப்புரவு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் கீழ்கண்டவாறு பட்டியல்படி விநியோகம் செய்யப்பட வேண்டும்.

| வ.எண் | பாதுகாப்பு உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கம்பூட்ஸ் | 40 |
| 2 | ஒளிரும் சட்டை | 100 |
| 3 | தலைக்கவசம் | 50 |
| 4 | மழை அங்கி | 100 |
| 5 | ஓவர் கோட் | 150 |
| 6 | பேஸ் மாஸ்க் | 5000<br>(Surgical Use and through ) |
| 7 | பேஸ் மாஸ்க் | 100 |
| 8 | கையுறை | 500 cloth |
| 9 | கையுறை | 50 Rubber |

மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் வாங்கிய பின்பு பட்டியல் தொகை வழங்கவும் அதற்கான உத்தேச செலவீனம் தொகை ரூ.6,00,000/–ம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1193/2018/எச்1)

**தீர்மான எண். 263**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –17**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு 300 வீடுகளுக்கு 1 நபர் வீதம் நகர் பகுதியில் அமைந்துள்ள 11089 குடியிருப்புகளுக்கு 37 களப்பணியாளர்கள் (DBC-Domestic Breading Checkers) நியமனம் செய்யும் பணி மேற்கொள்ள தொகை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.228 நாள்.16.10.2018–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 08.11.2018–ல் நேரடி மற்றும் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மாவட்ட ஆட்சியர் ஒரு நாள் ஊதியம் | In Adition charges for EPF, ESI, Meterial and Administrative Charges |
|---|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி, ஒட்டன்சத்திரம் | ரூ.296/– | 22.85 % மதிப்பீடு |
| 2 | திரு.கே.பொன்னுச்சாமி, பழனி | ரூ.296/– | 25.12 % மதிப்பீடு |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் கூடுதல் கட்டணமாக 22.85% மதிப்பீட்டில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி கூடுதல் கட்டணம் மதிப்பீட்டு விலையில் 22.85% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 264**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –18**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு பகுதிகளில் உள்ள பூங்காக்களில் முற்கம்பி வேலி அமைக்கப்பட்ட இடத்தில் பசுமை உரக்குடில் (GMCC) அமைக்க தொகை ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 05.11.2018–ம் நாளில் தனிஅலுவலர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 16.11.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகம்மது ரஸ்மி | 0.15 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.அய்யாவு | 3.19% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.மும்மது ரஸ்மி என்பவர் 0.15% மதிப்பீட்டு விலையில் வரப்பெற்ற குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.15% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.மும்மது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 265**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 15.11.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.